# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, யூலை மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1998, யூலை மாதம் 17 ஆம் திகதிய* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 யூலை மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 38/93

## மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்" என்ற பெயரில் அழைக்கப்படுவதும் அறிந்து கொள்ளப்படுவதுமான மன்றமொன்று அதனுடைய அங்கத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளின் பிரகாரம் அதனுடைய சகல கருமங்களையும் செவ்வனே நிறைவேற்றுதற்பொருட்டு மட்டக்களப்பில் இதுவரை அமைக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

இந்த மன்றம் அது அமைக்கப்படுவதற்கான நோக்கங்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்திருப்பதாலும், அது ஒருங்கிணைக்கப்படுவதற்காக விண்ணப்பம் செய்துள்ளதாதலாலும், அதனுடைய விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்ளுதல் பொதுமக்களுக்கு நன்மை பயக்குமாதலாலும் :

ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*1.* இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

*2.* இச்சட்டம் தொடங்கும் திகதியன்றும் அதற்குப் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போது மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தில்—அங்கத்தவர்களாயிருப்பவர்களும் இனிமேல் இந்தக் கூட்டுத்தாபன அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்' ன அழைக்கப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றாதல் வேண்டும் என்பதுடன் "மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்" என்ற பெயரில் தொடர்ந்திருக்கவும் இதே பெயரில் நிரந்தரமாகத் தொடர்ந்திருக்கவும் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரவும் வழக்குத் தொடரப்படவும் மன்றம் தனது விருப்பத்தின் பிரகாரம் ஒரு பொதுவான இலச்சினையைக் கொண்டிருக்கவும், தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தினைக் கூட்டிணைத்தல்.

2 — டீ 038595 — 1,100 (95/12)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொது நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவையாகும் :-

(அ) மட்டக்களப்பு இளைஞர்களின் ஆன்மீக, அறிவாற்றல், சமூக, உடல்சார்ந்த நலனை முன்னேற்றுதல் ;

(ஆ) இளைஞர்களிடையே விஞ்ஞானம், இலக்கியம் ஆகியவை சம்பந்தப்பட்ட கல்வியினை முன்னேற்றுதல் ;

(இ) நூலகங்களையும், வாசிகசாலைகளையும், உடற் பயிற்சிக்கூடங்களையும், பொது ஆர்வத்தைத் தூண்டும் இடங்களையும் ஏற்படுத்துதலும் பராமரித்தலும் ;

(ஈ) சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபடுதலும் அரசினால் மேற்கொள்ளப்படும் நிவாரண, புனர்வாழ்வு, வீடமைப்பு நடவடிக்கைகளில் உதவுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றில் எவற்றையும் எய்துவதற்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அத்தகைய எல்லாக் கருமங்களையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துவது, வேலையிலமர்த்தல் அத்துடன் அவர்களை வேலையிலிருந்து நீக்கல், வங்கிக் கணக்குகளைத் திறத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மூடுதல், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடனாகப் பெறுவது அல்லது திரட்டுவது, மானியங்களையும் நன்கொடைகளையும் பெற்றுக்கொள்வது அல்லது சேகரிப்பது, அதன் நிதியை முதலீடு செய்வது ஆகியன உட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும், புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்குத் தத்துவம் உடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தி[ன்] அலுவல்களை முகாமை செய்த[ல்].

5. கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், பதவி தாங்குநர்களையும் அத்தகைய விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படும் வேறு பன்னிரண்டு உறுப்பினர்களுக்குக் குறையாதோரையும் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தி[ன்] விதிகள்.

6. (1) காலத்துக்குக்காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குடனும், பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பிலும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாயிராத விதிகளை ஆக்குவது, கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையை வகுப்பது அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வது, வாபஸ் பெறுவது அல்லது வெளியேற்றுவது ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவி தாங்குநர்கள் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களுடைய தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் அத்துடன் அதன் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அக்கூட்டங்களைக்கூட்டி நடாத்துவதற்கான நடவடிக்கைமுறை, அத்தகைய கூட்டங்கள் நடாத்தப்படும் நேரங்கள், இடங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், அவற்றுக்கான நிகழ்ச்சிநிரலும், அத்தகைய கூட்டங்களுக்கு வேண்டிய கூட்ட நடப்பெண்ணும் அங்கே நடாத்தப்படவேண்டிய காரியங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தினது நிருவாகமும் முகாமையும், அதன் நிதியின் கட்டுக்காவல் மற்றும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் .

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒன்றாற் போன்றவாறு, அதேபோன்ற கூட்டத்திலும், அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப் படலாம் அல்லது அது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற சொத்துக்களைக் கொண்டிருக்கலாம்.

7. கொள்வனவு, மானியம், கொடை அல்லது இறுதிவிருப் பாவணக்கையளிப்பு அல்லது வேறு ஏதாவதொரு வழியில் கிடைக்கப்பெறும் அசையும் அல்லது அசையாத சொத்துக் களைப் பெறுவதற்கும் கூட்டுத்தாபனம் இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் இருத்தல் வேண்டும், அத்துடன், அத்தகைய ஆதனம் எல்லாம், இச்சட்டத்தின் நோக்கங் களுக்காகவும், தற்போதுள்ள விதிகளுக்கு அமைவாகவும் அவற்றினை நிலையாகக் கொண்டிருக்கவும் அவற்றினை விற்கும், ஈடுவைக்கும், குத்தகைக்கு விடும் அல்லது அவற்றில் மாற்றம் செய்யும் அல்லது பிறிதேதாவதொரு வகையில் அதனைக் கையாளும் முழு அதிகாரத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் வேண்டும்.

கழகத்தினால் செலுத்தப்படற்பால வையான அத்துடன் கழகத்துக்குச் செலுத்தப்படற் பாலவையான தனிசுகள்.

8. இந்தச் சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று கழகத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படல் வேண் டும் ; அத்துடன் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படவேண்டி யிருக்கும் அனைத்துத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப் படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றி, எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்திலுள்ள அம்சமெதுவாயினும், குடியரசினது அல்லது மக்கள் குழுமத்தினது அல்லது கூட்டுத்தாபனத்தினது அல்லது எவரேனும் ஆட்களினது உரிமைகளை, சட்டத்தில் குறிப்பிடப்பெற்றவர்கள் குடியரசின் உரிமைகள்மூலம் அல்லது அவற்றிலிருந்து அல்லது அவற்றின்கீழ் உரிமைகோருபவர்கள் விடயம் நீங்கலாக பாதித்தலோ அவையால் செல்வாக்குறுத்தலோ ஒண்ணாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.